FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348067

1. District : கிருஷ்ணகிரி PS: ஓசூர் நகர மகளிர் Year: 2025 FIR No.: 10/AC/2025 Date: 24.06.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : Date from : 13.06.2025 Date to : 24.06.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : காலை 11.45 மணி Time to : காலை 12.35 மணி
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24.06.2025 Time : 14.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினி மூலம் புகாராக கொடுக்கப்பட்டது
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: காலை 50 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : - (b) Address : உதவி பொறியாளர் அலுவலகம், மி.உ.ப. கோட்டகம், பெத்தலப்பள்ளி
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. தம்பிதுரை (b) Father's/ Husband's Name : T. முருகப்பா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 39/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தனியார் நிறுவன நிர்வாகம் (g) Address : No. 75, 5th அண்ணை நகர், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முருகன், உதவி மின் பொறியாளர், மி.உ.ப. கோட்டகம் பெத்தலப்பள்ளி, ஓசூர் (TK), கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/06/2025

24/06/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.06.2025 at 16.10 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

காவல் உதவி ஆய்வாளர்
உ.தி.க. மாளிகை
திருவல்லிக்கேணி

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 24.06.2025 ம் தேதி மதியம் 14.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், புதிய அன்னை நகர், பிளாட் எண்.75ல் சேர்ந்த திரு.சேட்டு மகன் திரு.S.தம்பிதுரை என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், S.தம்பிதுரை, வயது39/2025, த/பெ சேட்டு, பிளாட் எண்-75, நியூ அன்னை நகர், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு பிரிவு, கிருஷ்ணகிரி மாவட்டம். அய்யா, நான் மேலேசொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓசூர் பெத்தலப்பள்ளியில் MR Heat Treatment என்ற நிறுவனம் திரு.லோகேஷ்குமார் என்ற பெயரிலும் மற்றும் தர்ம சாஸ்தா இண்டக்ஷன் டெக்னாலஜி என்ற நிறுவனம் எனது மனைவி திருமதி.மேகலா பெயரிலும் நடத்திவருகிறேன். மேலே சொன்ன இரண்டு நிறுவனங்களுக்கும் தனித்தனியாக மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. அதில் தர்ம சாஸ்தா இண்டக்ஷன் டெக்னாலஜி என்ற நிறுவனத்திற்கு பயன்படுத்தப்படும் மின் இணைப்பு எண்.080800021580ஆகும். கடந்த14.08.2024-ஆம் தேதி பெத்தலப்பள்ளி மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் A.E.E. திரு.பாலசுப்பிரமணி மற்றும் A.E. திரு.முருகன் என்பவர் மற்றும் Special squad, Chennai அவர்கள் எனது நிறுவனத்தை ஆய்வு மேற்கொண்டபோது, மேற்படி இரு நிறுவனத்திற்கும் தடுப்புச்சுவர் ஏதும் இல்லாமல் இடைவெளி உள்ளதால், தர்ம சாஸ்தா இண்டக்ஷன் டெக்னாலஜி நிறுவனத்தின் மின் இணைப்பை வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்ளுமாறு தெரிவித்தும், மேற்படி மின் இணைப்பிற்கு அபராதம் ரூ.2,58,952/- விதித்தார்கள். நானும் உடனடியாக அன்றையதினமே கட்டிவிட்டேன். பிறகு சம்மந்தப்பட்ட மின் இணைப்பினை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றிவைப்பதற்கு விண்ணப்பிக்குமாறும் கூறினார்கள். எனது

பெயரில் உள்ள இடத்தில் தர்ம சாஸ்தா இண்டக்ஷன் டெக்னாலஜி நிறுவனத்தின் கட்டிடத்தைகட்டியும், இயந்திரங்களை இடம்பெயர்ந்தும் வைத்தேன். மேற்படி நிறுவனத்திற்கு பழைய மின் இணைப்பு எண்.080800021580 மாற்றிவைப்பதற்காக கடந்த 25.02.2025 ஆம் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தேன். பிறகு 28.02.2025 ஆம் தேதி அதுசம்மந்தமான file ஐ பெத்தலப்பள்ளி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று A.E திரு.முருகன் அவர்களை சந்தித்து அவரிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கிவைத்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக கூறி என்னை அனுப்பிவிட்டார். அதன் பிறகு சுமார் 3 மாதங்களாக எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றுவதற்கான பணிகள் எதுவும் நடைபெறவில்லை. அதனால் நான் கடந்த 10.05.2025 ஆம் தேதி பெத்தலப்பள்ளி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று A.E திரு.முருகன் அவர்களை சந்தித்து அவரிடம் எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றுவது பற்றி கேட்டேன். அதற்கு அவர் உங்களது நிறுவனத்தின் கட்டிடமானது உங்களது பெயரில் உள்ளது என்றும், மின் இணைப்பானது உங்களது மனைவி திருமதி.மேகலா பெயரில் உள்ளதாலும், மின் இணைப்பினை Shift செய்துகொடுக்கமுடியாது என்றும், முதலில் மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்துகொள்ளுமாறும் கூறினார். அதன்படி நானும் எனது மனைவி திருமதி.மேகலா பெயரிலிருந்த மின் இணைப்பினை எனது பெயருக்கு மாற்றம் செய்தபிறகு கடந்த 02.06.2025 ஆம் தேதி எனது நிறுவனத்தின் 080800021580 என்ற மின் இணைப்பினை Shift செய்வதற்காக ஆன்லைனில் விண்ணப்பித்து, அதன் நகலை A.E திரு.முருகனிடம் அன்றையதினமே கொடுத்தேன். அதை வாங்கி வைத்துக்கொண்ட A.E திரு.முருகன் அவர்கள், உங்களது மின் இணைப்பினை மாற்றிவைக்க கொஞ்சம் செலவாகும் என்றும் A.D-யிடம் கேட்டுவிட்டு சொல்வதாகவும் என்னிடம் சொன்னார். பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். கடந்த 13.06.2025 ஆம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு பெத்தலப்பள்ளி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று A.E திரு.முருகன் அவர்களை சந்தித்து எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றுவது பற்றிகேட்டேன். அதற்கு

அவர் உங்களது மின் இணைப்பினை மாற்றிதருவதற்காக Sanction தயார்செய்துகொண்டிருப்பதாக சொன்னார். அதனால் நானும் வந்துவிட்டேன். ஆனால், இது நாள் வரையில் எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றிவைப்பதற்கான எந்த வேலையும் நடைபெறவில்லை. எனவே நான் இன்று 24.06.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.35 மணிக்கு பெத்தலப்பள்ளி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று A.E. திரு.முருகன் அவர்களை சந்தித்து அவரிடம் எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றுவது பற்றி கேட்டேன். A.E. முருகன் அவர்கள் என்னிடம் இன்று 24.06.2025 ஆம் தேதி மாலை 05.00 மணிக்குள் லஞ்சமாக ரூ.40,000/-த்தை எடுத்துக்கொண்டுவா என்று கூறிவிட்டார். பெத்தளப்பள்ளி A.E திரு.முருகன் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.40,000/-த்தை கொடுத்து எனது நிறுவனத்தின் மின் இணைப்பினை மாற்றம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.40,000/-த்துடன் அவரை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட பெத்தலப்பள்ளி A.E திரு.முருகன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) S.தம்பிதுரை 24.06.2025.

Sir, a computer typed complaint has been received by me on 24.06.2025 at 14.00 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tr.Murugan has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.10/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 24.06.2025 at 14.30 hrs against the accused Tr.Murugan, Assistant Engineer, Bethalapalli. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

24/06/2025
Inspector of Police
V & AC Krishnagiri